# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 214/2020

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. முருகன் | **Pw3** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of April 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஷிபா மருத்துவமனையில் PRO வாக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். இந்த வழக்கில் ஷிபா மருத்துவமனை மருத்துவர் சார்பாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க எனக்கு வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் **ம.சா.ஆ.9** ஆகும். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அருணாசலம், கதவு எண். 1/77B மாடசாமி கோவில் தெரு, முள்ளிகுளம் என்ற நபருக்கு எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டது. மேற்படி நபர் கடந்த 13.08.2018 ம் தேதி உள்நோயாளியாக

அனுமதிக்கப்பட்டு 06.10.2018ம் தேதி சிகிச்சைக்குப்பின்னர் விடுவிக்கப்பட்டார். மேற்படி நபருக்கு எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று **ம.சா.ஆ.10** ஆகும். மேற்படி நபர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த நாள் முதல் விடுவிக்கப்படும் வரை அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியும். எங்கள் மருத்துவமனையில் மேற்படி நபர் சிகிச்சை பெற்ற காலம் முழுவதும் மயக்கநிலையிலேயே இருந்தார். மேற்கொண்டு சிகிச்சை அளித்தாலும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் இருக்காது என்பதால்தான் மேற்சொன்ன நபரின் மனைவியின் வேண்டுகோளின் அடிப்படையில் எங்கள் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8 ரசீதுகள் எங்கள் மருத்துவமனையில் மேற்சொன்ன நபருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகளை தொடர்ந்து வழங்கப்பட்டதுதான். மேற்படி ரசீதுகளில் எங்கள் மருத்துவமனை Cash Counter–ல் பணிபுரியும் நபரால் மருத்துவமனை முத்திரை இடப்பட்டு கையொப்பமிட்டு வழங்கப்பட்டுள்ளது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஷிபா மருத்துவமனையில் மக்கள் தொடர்பு அதிகாரியாக பணிபுரிந்துவருகிறேன். எங்கள் மருத்துவமனையில் மேற்படி நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரோ அல்லது பணத்தை பெற்றுக்கொண்டு ரசீது வழங்கிய அதிகாரியோதான் ம.சா.ஆ.8 ரசீதுகள் குறித்து சாட்சியம் அளிக்க இயலும் என்றும், என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அருணாசலம் மயக்க நிலையில் இருந்தார் என்பது குறித்து சாட்சியம் அளிக்க எனக்கு தகுதி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.8 ஆவணத்தின் அடிப்படையில் பெறப்பட்ட ரூ.12,54,306/– பணத்திற்குரிய வருமான வரி செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி விவரம் வருமான வரி அலுவலகத்தில் உள்ள

பதிவேடுகளில் துலங்கும்.

ம.சா.ஆ.8 ஆவணத்தில் மருந்திற்காக ரூ.3,96,346/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபருக்கு எந்த தேதியில் என்ன வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதற்கும், அதற்குரிய தொகை எவ்வாறு செலுத்தப்பட்டது என்பது பற்றிய முழு விவரங்கள் ம.சா.ஆ.8 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னென்ன தேதிகளில் என்ன மருந்துகள் வாங்கப்பட்டன என்பது பற்றிய விவரம் ம.சா.ஆ.8 ஆவணத்தில் பிற்சேர்க்கையாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மருத்துவமனையில் மக்கள் தொடர்பு அதிகாரி மட்டுமே என்றும், அருணாசலத்திற்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் வழங்கப்பட்ட ரசீதுகள் குறித்து சாட்சியம் அளிக்க எனக்கு தகுதியில்லை என்றும், எனவே என்னுடைய சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi